RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1999

# அறநூல்கள் கூறிடும் அற்புத வழிகள்

த. சங்கீதா [அ, *]

[அ] தமிழ் உயராய்வு மையம், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை-625001, தமிழ்நாடு, இந்தியா

# Virtue in the Ancient Tamil Books

D. Sangeetha [a, *]

[a] Department of Tamil, Senthamil College, Madurai-625001, Tamil Nadu, India

* Corresponding Author: d.sangeetha5981@gmail.com

Received: 01-09-2022
Revised: 24-10-2022
Accepted: 03-11-2022
Published: 10-12-2022

Check for updates

**ABSTRACT**

U. V. Saminatha Iyer traces the works of Sangam period, wrote them down in his works for Tamil people and presented it as a golden treasure. Tamil language is honoured with the special epithet Tamil without self. Tamil language is rich in literature, excellent in epic, in piety, in books of charity, in books of justice, a language cannot be matched with other languages, an archaic language and the distinctive language. Books such as Ettuthogai, Pathupaatu and Paripadal describes the intellectual richness of the Tamil language. Ancient Tamil texts like Kurundogai, Thirumantram, Trikadugam, Manimegalai, Naladiyar, Pazhmozhinanuru, Sirupanchamulam, Innaanarpadu, Vivekasintamani, Purananuru, Iniyavai Narpathu, Muthurai, Nalvali, Tolkappiyam, Mudumozhikanchi, Asarakovai and Ulaganeethi mentions that people should live by virtue, piety and culture. It also mentions the methods and concepts very clearly so that all people can accept them.

**Keywords:** Virtue, Ettuthogai, Pathupaatu, Paripadal

## முன்னுரை

தமிழ்மொழியில் அறநூல்கள் நிறைந்துள்ளன. அந்நூல்களை இளைய தலைமுறையினர் பயன் பெறுவதற்கு பாடங்களில், பள்ளி கல்லூரிகளில் பாடத்திட்டத்தில் வைத்து அறக்கருத்துக்களையும், பண்பாடு, ஒழுக்கம், சிறந்த சிந்தனைகளையும் வளர்க்கலாம். தமிழுக்கும் தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்ப்பன அறநூல்களே எந்த மொழியிலும் இப்படிப்பட்ட நூல்கள் தோன்றவில்லை. பதினெண்கீழ்கணக்கு, மேற்கணக்கு நூல்களிலும் காப்பியங்களிலும் அறக்கருத்துக்கள் நிறைந்துள்ளன. திருக்குறளில் திருவள்ளுவர் சொல்லாத செய்திகளே இல்லை எனலாம். மதுரைக் கூல வாணிகன் சீத்தலைச் சாத்தனார், மணிமேகலையில் யாவர்க்கும் ஏற்கும்படி அழகான பௌத்த மதக் காப்பியம் வழி தனது கருத்துக்களை காப்பியமாகத் தந்துள்ளார்.

திருவள்ளுவரின் மனைவி வாசுகி கணவருக்கு உணவு படைத்துக் கொண்டிருந்தாள். அப்போது அம்மா! சோறிடுக! என்று பிச்சைக்காரன் கூறினான். வாசுகி சிறிது காலந் தாழ்த்து, உணவை வாயிலுக்கு கொண்டு வந்தார். பிச்சைக்காரன் கோபத்தோடு நிமிர்ந்து நோக்கினான். அதைக் கண்ட வாசுகி, "கொக்கென்று நினைத்தனையோ கொங்கிணவா?" என்று வினவினாள். அதனைக் கேட்ட கொங்கணன், இப்பெண் கற்பில் சிறந்தவள் நம்மை எறித்தாலும் எறித்து விடுவாள் என்று அஞ்சி ஓடினான். நாம் செய்யும் அறத்தை நிறுத்திவிடாமல் செய்ய வேண்டும். பிறன் மனைவியை நயவாமை இறைவன் மேல் பக்தி வேண்டும். இப்பூமியில் மனதைப் பக்குவப்படுத்தி வாழ வேண்டும். அதிவீர பாண்டியர் அன்பும் அறமும் சைவ சமயத்தின் சிவனாலே அடையலாம் என்கிறார். அக்காலத்தில்

கல்வியில் சிறந்த பெண்ணரசிகள் இருந்தனர். சாற்று கவியும் பாடியுள்ளனர். தவம் ஒழுக்கம், ஈகையும் உயர்வைத் தரும் என்பதை இவ்வாய்வின் வழி அறியலாம்.

## உலக நீதி கூறும் உண்மை நெறிகள்

"நெஞ்சை ஒளித்தொரு வஞ்சம் இல்லை

கற்றவரைப் பழித்துப் பேச வேண்டாம்

கற்றவரை ஒரு நாளும் பழிக்க வேண்டா"

கற்றறிந்த அறிஞரை ஒருநாளும் இகழ்ந்துரைக்காதே என உலகநாதர் கூறியுள்ளார் (Usha, 2010).

"மனையாளைக் குற்றமொன்றும் சொல்ல வேண்டா" மனைவியிடம் குற்றம் இருந்தாலும் அனுசரித்துப் போக வேண்டுமே தவிர அதனை பெரிதுபடுத்திப் பேசக்கூடாது என்று இவ்வரி கூறுகிறது.

"கணக்கழிவை ஒருநாளும் பேச வேண்டா"

நாம் செய்த காரியம் கெட்டுப் போனதை ஒருநாளும் வருந்திப் பேசிக் கொண்டிராதே என்பதை இவ்வரி உணர்த்துகிறது (Usha, 2010).

"இறந்தாலும் பொய்தன்னைச் சொல்ல வேண்டா"

இறப்பு நேரிடினும் பொய் சொல்ல வேண்டாம்.

"புண்படவே வார்த்தைகளைச் சொல்ல வேண்டா"

புண்படுத்தும் வார்த்தைகளைப் பேசாதே பிறர் உள்ளம் வருந்துமாறு வார்த்தைகளைச் சொல்லாதே என்பது இதன் விளக்கமாக அமைந்துள்ளது (Usha, 2010).

## திருக்குறளில் அறம்

"அறன்ஈனும் இன்பமும்ஈனும் திறன் அறிந்து

தீது இன்றி வந்த பொருள்"

அனைத்துக்கும் ஆசையே காரணம் (Julius, 2010). அதிலும் பிறர் பொருள் மீதான ஆசை என்பதால் அதனை தவறான வழியில் பெறக்கூடாது.

"மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்

அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு"

மறந்தும் கூட மற்றவர்க்கு கேடு விளைவிக்க கூடிய செயல்களை எண்ணக்கூடாது என்கிறார் வள்ளுவர் (Julius, 2010).

"எளிதென இல்லிறப்பான் எய்து மெஞ்ஞான்றும்

விளியாது நிற்கும் பழி"

மருள்கொண்டு மாதர்மேல் மையல் கொள்வோர் தம் இருள் கொண்ட சிந்தை இழிவான பழிபெறும். இதனாலேயே வள்ளுவர் இவ்வாறு கூறியுள்ளார் (Julius, 2010).

"பகை பாவம் அச்சம் பழியென நான்கும்

இகவாவாம் இல்லிறப்பான் கண்"

எனக் கூறுகிறது (Julius, 2010).

## அறநெறி கூறிய குமரகுருபரர்

கைலாயமும் திருப்பதியும் ஒருங்கு விளங்கும் ஸ்ரீவைகுண்டத்தில் சைவ வேளாளர்கள் சிறந்து வாழ்கின்றனர். கோட்டை கட்டி வாழும் பெருமைஇ அவ்வூர் வேளாளர்க்கு உண்டு. அவர்கள் ‘கோட்டைப் பிள்ளைமார்’ என்றே கொண்டாடப்படுவர். இன்றும் வேளாளர் வாழும் கோட்டை அவ்வூரில் உண்டு. அங்கு வாழும் பெண்கள் கோட்டையுள் இருந்து வெளியே வருவது இல்லை. ஆண்கள் மட்டுமே வெளிய வந்து போவார்கள்.

கோட்டையைச் சேர்ந்த ஆண்மக்களையன்றிப் பிறர் உள்ளே செல்லக்கூடாது. வெளியில் இருந்து பெண்மக்கள் எவரும் உள்ளே சென்று வரலாம். அப்படிப்பட்ட சீவைகுண்டத்தில் உள்ள கைலாசப் பகுதியில் சைவ வேளாளர்கள் சிறப்புடன் வாழ்ந்து வந்தனர். அவர்களுள் சண்முக சிகாமணி கவிராயர் என்பவரும் ஒருவர். அவர் தனது சிவகாமியம்மையாருடன் இல்லறம் நடத்தி வந்தார். பல்லாண்டுப் பிள்ளைப்பேறு இன்றி திருச்செந்தூர்ப் பெருமானை வழிபட்டனர். அப்பெருமானை உள்ளத்தில் நினைந்து அருந்தவம் இருந்தனர். அத்தவத்தில் முந்நூற்று ஐம்பது ஆண்டுகட்கு முன்னர் அவர்கட்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. ஐந்து ஆண்டுகள் கழிந்தும் பேசாதிருப்பதைக் கண்டு கவலைக் கொண்டனர். மனம் நொந்தனர். அதனைத் திருச்செந்தூர்ப் பெருமானிடம் கொண்டுவிடக் கருதினர். அக்குழந்தையை அழைத்துக் கொண்டு திருச்செந்தூருக்குப் புறப்பட்டனர். அப்போது பற்பல நல்ல சகுணங்கள் தோன்றின. அவற்றைக் கண்டு தாயும் தந்தையும் தெளிவு அடைந்தனர்.

திருசெந்தூரில் இலை விபூதி பெற்றுப் பிள்ளையை இறைவனிடம் அடைக்கலமாகச் சேர்த்தனர். சண்முக விலாச மண்டபத்தில் தங்கினர். நாள்தோறும் நோன்பினை மேற்கொண்டனர். அப்படியே நாற்பத்தொரு நாள் அப்பெற்றோர் பாடு கிடந்தனர். கடவுள் அருளாலே அக்குழந்தை வாய்திறந்து பேசத் தொடங்கியது.

முருகப் பெருமானே அப்பிள்ளையைத் தட்டி எழுப்பிக் “குமர குருபரா”! என்று வாய் குளிர அழைத்தார்.

நின் வாக்கிற்குத் தடை ஏற்படும் இடத்தில் நினக்குப் பரஞானம் கிடைக்கும் என்று சொல்லி அம் முருகப்பெருமானார் மறைந்தார்.

அவ்வோசை கேட்டு எழுந்த பிள்ளை அம்மா அப்பா என்று பெற்றோர் உளங்குளிர அழைத்தது. ‘கடலில் ஆடிக் கந்தனை வழிபடுவோம் வாருங்கள்! வாருங்கள்! என்று வாய்திறந்து பேசியது.

தம் ஐந்தாண்டுப் பருவத்திலே வாய்திறந்து பாமாலை சூட்டினார். அதுவே ‘கந்தர் கலிவெண்பா’ என்னும் செந்தமிழ்ச் சிறுநூல் ஆகும். முருகன்மீது பாமாலை தொடுக்கும் பைந்தமிழ்ப் புலமையும் பெற்றார். அதனால் இவரை குட்டி திருஞான சம்பந்தர் என்று சைவர்கள் கொண்டாடுவர்.

## நறுந்தொகை தந்த நாவலர்

ஐந்நூறு ஆண்டுக்கு முன்னர் தென்பாண்டி நாட்டைச் சிற்றரசர்கள் இருவர் ஆண்டு வந்தனர். அவர்கள் இருவரும் உடன் பிறந்த சகோதரர்கள் ஆவார்கள். சிறந்த தமிழ்ப் புலவர்கள். அதிவீரராமப் பாண்டியர் கொற்கை நகரை ஆண்டு வந்தார். அவருக்கு வல்லபன், வழுதிஇ பிள்ளைப் பாண்டியன் குலசேகரன், தமிழ் வளர்த்த தென்னவன் என்பன அவர் பெற்ற சிறப்புப் பெயர்கள் ஆகும்.

இவ்வரசர் தன்னைக் ‘கொற்கையாளி குலசேகரன்’ என்று கூறிக் கொள்கிறார். நிரம்ப வழகிய தேசிகரிடம் தமிழ் கற்றார். அவ்வாசிரியர் கருமை நிறமாக இருப்பார். அதற்கு மன்னர் புலவரே நீர் அண்டங் காக்கைக்குப் பிறந்தவரோ? என்று நகைச்சுவையாகக் கேட்டார்.

அது கேட்ட தேசிகர், “அரசே! தாங்கள் அன்றே அண்டங் காக்கைக்குப் பிறந்தவர்? அவ்வாறு இருக்கப் புலவனாகிய என்னை அண்டங் காக்கைப் பிறந்தவன் என்பது பொருந்துமோ? என்றார். அண்டங் காக்கை என்ற தொடர் “உலகைக் காத்தல்” என்று பொருள்படும்.

உலகைக் காத்ததற்குப் பிறந்தவர் அரசர் என்ற பொருள் கேட்டு மகிழ்ந்தார். அறநெறி பண்பாடுகள் பண்டைய காலத்திலே சிறந்திருந்தது என்பது சான்றாகும்.

## நைடதம் பாடிய மன்னர்

நிடத நாட்டு மன்னன் நளன் வரலாற்றை வடமொழியில் ஹர்ஷகவி என்பார். காவியமாகப் பாடியுள்ளார். அந்நூல் நைஷதம் எனப்படும் அதனை மன்னர் அதிவீரராம பாண்டியர் நைடதம் என்று மொழிபெயர்த்துப் பாடினார்.

“நைடதம் புலவர்க்கு ஔடதம்” என்று போற்றினார். புலவர்களின் அறியாமை நோயைப் போக்க அரிய மருந்தாக விளங்குவது நைடதம் என்னும் காவியம் ஆகும்.

நைடதம் என்னும் தனது நூலுக்கு தனது அண்ணன் மன்னர் நல்லூரில் அரசாலும் வரதுங்கராமர் இடம் தந்து சாற்று கவி வாங்கிவரச் சொல்ல அவ்வரசனோ அந்நூலில் கடவுளைப் பற்றி இல்லாமல் நிடத நாட்டு நளன் கதையை அறிந்து தனது அரசியிடம் சாற்றுகவி எழுதச் சொல்கிறார்.

## அரசியின் சாற்றுக்கவி

அரசரின் விருப்பத்தை அறிந்த அரசி நைடத நூலை ஆர்வமுடன் வாசித்தாள். இந்நூல் வேட்டை நாயின் நடையைப் போன்றும், கரும்பின் அடியிலிருந்து கடித்துத் தின்னுவது போன்றும் அமைந்துள்ளது, என்று ஓலையொன்றில் தன் கருத்தை எழுதினாள். அதனை தூதுவனிடம் தந்து அனுப்பினாள்.

## மன்னன் அதிவீரராம பாண்டியன் செயல்

இதனைப் படித்து உணர்ந்த மன்னன் அண்ணன் மேல் படையெடுத்தார். அதிவீரராமர் நால்வகைப் படைகளுடனும் சென்றார். வரதுங்கர் வாழும் நல்லூரின் எல்லையை அடைந்தார். ஆங்கொரு சோலையில் தங்கினார். தமது படையெடுப்பைத் தமையனாருக்குத் தெரிவிக்குமாறு தூதன் ஒருவனை அனுப்பினார். அவன் திரும்புவதற்கு நீண்டநேரம் ஆயிற்று. ஆதலின், தாமே நேரே சென்று தமையனாரைச் சந்திக்க நினைத்தார். நகருள் புகுந்து வரதுங்கர் அரண்மனையை அடைந்தார். தமையனார் பூசை செய்து அவர் சிவன் மேல் பாடிய பாடலைக் கேட்டார்.

‘சிவன் காதுகளில் சங்கையே குண்டலமாக அணிந்தவன். தென்திசையில் உள்ள கரிவலம் வந்த நல்லூரில் எழுந்தருளும் இறைவன். கங்கையைச் சடைமுடியில் தரித்தவன். வரதுங்கர் பாடலைப் பாட சிறுபூஜை முடிவில் தமையனார் பாடிய அரிய பாடலை அதிவீரராமர் கேட்டார். தமது மனதைப் பாடலில் பறிகொடுத்தார். உள்ளம் உருகினார். உடம்பு நடுங்கியது. தாம் செய்த செயலை அறிந்து வருந்தினார். அண்ணனிடம் ஓடிச் சென்று பாதங்களில் வீழ்ந்து வணங்கினார். தம்மை மன்னிக்குமாறு வேண்டினார்.

அங்கு வந்த அரசியாரோ அவள் தன் மைத்துனனுக்குச் சிறந்த அறிவுரைகளை கூறினாள்.

‘அரசே! உடன்பிறப்பு என்பது உயர்ந்த தோள்வலி அல்லவா! அதனை இழக்கத் துணிந்தீரே! இராமனும் பரதனும் போன்ற உடன்பிறப்பு அல்லவா உலகில் உயர்வைத் தரும்! கதிரவன் மைந்தனாகிய சுக்கிரீவனையும் இலங்கை விபீஷணனையும் உடன்பிறப்புக்கு எடுத்துக்காட்டாக எண்ணாதீர் என்று அன்புடன் எடுத்துரைத்த அண்ணியாரின் அறிவுரையைக் கேட்ட அதிவீரராமர் அகமகிழ்ந்தார்.

அறநெறிகளை அரசரோ அரசியோ யார் கூறினாலும் மதித்துக் கேட்கும் மாண்பு அந்த காலத்தில் சிறந்து இருந்தது என்பதை இந்நிகழ்வுகளால் அறியமுடிகிறது.

சிறுவர்க்கு நறுந்தொகை

அதிவீரராமர் மன்னர் சிறுவர்க்கு அறிவுரை புகட்ட விரும்பினார். சின்னஞ்சிறிய தொடர்களால் உயர்ந்த உண்மைகளை விளக்கினார். எண்பத்திரண்டு தொடர்களை உடைய சிறுநூலே 'நறுந்தொகை' என்னும் அறநூல் இந்நூல் 'வெற்றி வேற்கை' என்றும் கூறப்படுகிறது. இந்நூல் தமிழ் மணம் கமழும் அரிய கருத்துக்களைத் தொகுத்துக் காட்டும் சிறிய நூல் ஆகும்.

'கற்கை நன்றே கற்கை நன்றே

பிச்சை புகினும் கற்கை நன்றே'

எக்குடிப் பிறப்பினும் யாவரே யாயினும்

அக்குடியில் கற்றோரை மேல் வரு கென்பார்

'அறிவுடை யொருவனை அரசனும் விரும்பும்'

அதிவீரரின் சிறந்த புலமையை நறுந்தொகை நூல் ஒன்றே நன்றாக விளக்கும் (Julius, 2010).

## அதிவீர பாண்டியரின் அறக்கருத்துக்கள்

எந்தப் பொருளும் தனது இயல்பில் என்றைக்கும் மாறாது! பசுவின் பாலை எவ்வளவு காய்ச்சினாலும் தன் சுவை குறைவதில்லை! பொன்னை நெருப்பில் இட்டு எவ்வளவு உருக்கினாலும் தன் ஒளி குன்றுவதில்லை. சந்தனத்தை எவ்வளவு அரைத்தாலும் தன் மணம் குறைவதில்லை. அகிலை எவ்வளவு புகைத்தாலும் தீய நாற்றம் எழுவதில்லை. கடலை எவ்வளவு கலக்கினாலும் சேறு ஆவதில்லை, பேய்ச்சுரக்காயை எப்படி சமைத்தாலும் கசப்பும் மாறுவதில்லை. உள்ளிக்குப் பலவகை நறுமணத்தை ஊட்டினாலும் அது கமழ்வது இல்லை என்று கூறியுள்ளார்.

பதினான்கு அழகு பற்றியும் கூறியுள்ளார். 'கல்விக்கு அழகு கசடற மொழிதல், செல்வர்க்கு அழகு செழுங்கிளை தாங்குதல் வேதியர்க்கு அழகு வேதமும் ஒழுக்கமும் மன்னவர்க்கு அழகு செங்கோன் முறைமை, வாணிகர்க்கு அழகு வளர்பொருள் ஈட்டல் என்று சிறுசிறு தொடர்கள் சிறந்த அறக்கருத்து உள்ள உண்மைகளைக் கூறுகிறார்.

## அன்பும் அறமும் சைவமே

பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் யாவும் மனிதர்கள் என்றுமே கடைபிடித்து வாழ வேண்டிய வாழ்வுக்கான அறநெறிகள் கொண்டவை. சங்கம் மருவிய காலத்து நூல்கள். எனினும் சங்க இலக்கியங்களிலேயே அறம் குறித்த கருத்துக்களில் பல பாடல்கள் உள்ளன.

பக்தி இலக்கியத்தில் சமயக் குரவர்களாகிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர், ஆகிய நால்வரும் பாடிய பாடல்களில் சமய வழிபட்ட அறச்சிந்தனைகளும் வெளிப்பட்டுள்ளன.

"அன்பின் உள்ளான் புறத்தான் உடலாய் உள்ளான்

முன்பின் உள்ளான் முனிவர்க்கும் பிரான் அவன்

அன்பின் உள்ஆகி அமரும் அரும்பொருள்

அன்பின் உள்ளார்க்கே அணை துணை ஆகுமே"

சைவ சமயம் போதிக்கக் கூடிய கருத்துக்களை உணர்ந்து பார்ப்போமாயின் அன்புடைமையாகும். 'அன்பே சிவம்' என்னும் தத்துவத்தை முன் வைத்து எழுதப்பட்ட சைவ சமயத்தில் மானுட நேயத்திற்கும் அறநெறிகளையும் கூறியுள்ளன (Julius, 2010).

## மணிமேகலை கூறும் அறம்

மணிமேகலையில் சீத்தலைச் சாத்தனார் இவ்வாறு அறத்தைப் பற்றிப் பாடியுள்ளார்.

"அறமெனப் படுவ தியாதெனக் கேட்பின்

மறவா திதுகேள் மன்னுயிர்க் கெல்லாம்

உண்டியு முடையு முறையுரு மல்லது

கண்ட தில்லெனெ காவல் னுரைக்கும்"

மணிமேகலை பௌத்த அறநெறிக் கருத்துக்களை பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் சமண அறநெறிக் கருத்துக்களையும் அதிகமாக கூறியுள்ளது (Julius, 2010).

"சிற்றினம் அல்லார்கள் சொல்லலும் இம்மூன்றும்

கற்றறிந்தார் பூண்ட கடன்"

கற்றறிந்தார் பூண்ட கடன் என்ன என்பதை நற்றமிழ்க் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாகிய மும்மூன்றாக அறங்களை உரைக்கும் திரிகடுகம் செம்மொழியில் செப்புகிறது (Julius, 2010).

## அன்பும் அறனும் வாழ்க்கை

அன்னையின் மடியில் "முட்டை பொறிந்தது முந்நூறு நாளில்" ஏதோ ஒரு காரணத்தால் பின்னையொரு நாளில் மரணத்தில் மனித வாழ்வு முடிகிறது. இறப்புக்கும் இடைப்பட்ட கால தூரத்தை மனிதன் கடக்கும் பயணமே வாழ்க்கை இப்பயணத்தைப் "பிறவிப் பெருங்கடல்" எனக் கூறினாலும் தம்மோடு உடன் பயணிக்கும் மனிதரிடம் ஒவ்வொருவரும் காட்டும் அன்பு, நேயம் உணர்வுகளின் வெளிப்பாடாக ஒளிர்கின்றன. தமிழ் மொழிகளில், பாடல்களில் பாடல்களின் உட்பொருளில் சிப்பிக்குள் முத்தாகச் சிலிர்த்தெழும் இசைப்பண்புகளை அனைத்து உயிர்களிடத்தும் அன்பு கொண்டு, அன்போடு உறவு கொண்டு, மனித உணர்வுகளை மதித்து நடக்க நமக்குக் கற்பிக்கப்பட்ட பண்புகளை இலக்கியங்களில் அதிகம் அமைந்துள்ளது.

## அறன், அன்பு அறிவு வலியுறுத்தல்

"நூறு சமயம் உளவா நுவலுங்கால்

ஆறு சமயம் அவ் ஆறிள் படுவன

கூறு சமயங்கள் கொண்ட நெறி நில்லா

ஈறு பரநெறி இல்லா நெறி அன்றே"

நாம் வாழுகின்ற இவ்வுலகில் மனதைப் பக்குவப்படுத்தி நல்வழியில் உலகில் வாழ்ந்து வீடுபேறு அடையக் காரணங்கள் சமயங்களே உருவ வழிபாட்டை விலக்கியவை (Julius, 2010). அறிவுசார் சமயம் எனில், உருவ வழிபாடு, செய்து அன்பை மையமாகக் கொண்ட அன்புசார் சமயங்களே இன்றிமக்கட் தொகையில் வளர்ந்து நின்று நிலையாக நிலவி வருவதை நாம் காண்கிறோம்.

கடவுள் உருவ வழிபாடு கூறிடும் சமயங்கள் அனைத்தும் மனிதநேயம், தீயவை செய்தலுக்கு நாணிட, சிறந்த வழிகாட்டிட தமக்கே உரிய, அறநெறிப் போதனைகளையும், ஒழுக்க நெறிகளையும் ஆயிரக்கணக்கில் வடித்தெடுத்துப் பார்க்கும் படி இலக்கியங்களில் தந்துள்ளனர்.

## நாலடியாரில் அறம்

"இன்று கொல்? அன்று கொல்? என்று கொல்? என்னாது

பின்றையே நின்ற கூற்றம் என்று எண்ணி

ஒருவுமின், தீயவை ஒல்லும் வகையால்

மருவுமின் மாண்டார் அறம்"

'ஓவாது நின்று உழற்றி வாழ்ந்திடினும், வாழ்நாட்கள் விரைவில் கழிந்து விடும் என்பதால் அறஞ்செய வேண்டும் எனப் பறை சாற்றுகிறது (Julius, 2010).

## பழமொழி நானூறு

"பட்ட வகையால் பலரும் வருந்தாமல்

கட்டுடைத் தாகக் கருதிய நல்லறம்

முட்டுடைத் தாகி இடை வீழ்ந்து ஒழிதலின்

நட்டறான் ஆதலே நன்று"

செய்யும் அறத்தை இடையிலே நிறுத்திவிடாமல் இடையறாது செய்தல் வேண்டும் எனும் பழமொழிப் பாடல், ஒரு பயிரைப் பதமாக நட்டுவித்துக் காத்து விளைய வைத்து அறுத்துப் பயன் பெறாமல் போகின்றவரை விட அதனை நாடமாலேயிருப்பது நல்லது என்பதை, குறுக்கிடும் இடர்பாடுகளைக் கருதி இடையிலேயே அதனை நிறுத்தி விடல் கூடாது என்ற கருத்தை இப்பாடலால் அறியலாம் (Julius, 2010).

## திருமந்திரம் கூறும் பிறன்மனை விழையாமை

'ஆத்த மனையாள் அகத்தில் இருக்கவே

காத்த மனையாளைக் காமுறும் காளையர்

காய்ச்ச பலாவின் கனி உண்ண மாட்டாமல்

ஈச்சம் பழத்துக்கு இடர்உற்ற வாறே'

பிறன் மனை நயவாமை என்பது இறைவனாலேயே அளிக்கப்பட்ட அன்புக் கட்டளை. இதனை மீறினால் பிறர் முன்னிலையில் நம் மானம் பறிபோகும். கொடியார் கையில் உயிரை இழக்கவும் நேரிடும். அந்நியர் நம் சொத்தைத் தின்று கொழுப்பர். பாடுபட்ட சொத்துக்கள் அனைத்தும் வேறு ஒரு குடும்பத்திற்கு போகும். எலும்பும் தோலுமாய் உருக்குழைந்து வாழ்வின் இறுதியில் மீளாத் துயரில் மூழ்கி மக்கள் மன்றத்தில் மானமிழந்து தலைகுனிந்து நிற்க நேரிடும் என்று திருமந்திரப் பாடல் வழி வாழ்க்கை நெறிகளை கூறியுள்ளது (Julius, 2010).

## நாலடியார் கூறும் பிறன்மனை நோக்காமை

"அறம் புகழ் கேண்மை, பெருமை, இந்நான்கும்

பிறன் தாரம் நச்சுவார்ச் சேரா! பிறன் தாரம்

நச்சுவார்ச் சேரும், பகை பழி, பாவம் என்று

அச்சத்தோடு இந்நாள் பொருள்"

என்று விளக்குகிறது (Julius, 2010). அம்பினால், நெருப்பால், சூரியக்கதிர் ஒளியால் உடல் வெம்பிச் சுட்டாலும் அது புறச் சூடு மட்டுமே. ஆனால் பிறர் மனை மேல் வெம்பி மனதைச் சுடும் இயற்கையுடைய காமம் பார்க்கும் பார்வையில்தான் வளர்கிறது என்பதை வலியுறுத்திட

"பல்லார் அறியப் பறை அறைந்து நாள் கேட்டு

கல்யாணம் செய்து கடி புக்க மெல் இயல்

காதல் மனையாளும் இல்லாளா என ஒருவன்

ஏதில் மனையாளை நோக்கு?"

நாலடியார் எதற்காக அடுத்தவர் மனைவியை நோக்குவது எனக் கூறுகிறது (Julius, 2010). இல்லற இன்பம் மட்டுமே உயரிய இன்பம் என்றும் காமம் அல்ல என்றும் வலியுறுத்துகின்றது. அறநூல்களின் சாரத்தைப் பிழிந்து தருவது நாலடியார் பாடலில் கூறியுள்ள சிறந்த கருத்தாகும்.

## சிறுபஞ்ச மூலம் கூறும் அறம்

அறநூல்களின் சாரத்தைப் பிழிந்து தரும் சிறுபஞ்ச மூலம்

"உடம்பு ஒழிய வேண்டின், உயர்தவம், மற்று ஈண்டு

இடம் பொழிய வேண்டுமேல், ஈகை, மடம் பொழிய

வேண்டிய அறிமடம் வேண்டேல், பிறர்மனை

ஈண்டின் இயையும் திரு"

என்கிறது (Julius, 2010). தவமும், ஈகையும், ஒழுக்கமும், ஞானமும் பிறன்மனை நயவாமையும் உயர்வைத் தரும். திருவைத் தரும் என்று சிறுபஞ்ச மூலம் கூறுகிறது.

"பெருமை உடையாரைப் பாடு அழித்தல் இன்னா" (Julius, 2010)

என இன்னா நாற்பதும் இனிது இயம்புகிறது.

"கொல்லாமை முன் இனிது கோல் கோடி, மா ராயன்

செய்யாமை முன் இனிது செங்கோலன் ஆகுதல்

எய்தும் திறத்தால் இனிது என்ப யார் மட்டும்

பொல்லாங்கு உரையாமை நன்கு"

எவரையும் தீமை ஏற்படும் வகையில் பொல்லாங்கு உரையாமை சாலச்சிறந்தது எனக் கூற முற்படும் இனியவை நாற்பது என "நாட்டார் புறங்கூறான் வாழ்தல் நனி இனிதே என இசைபட எடுத்துரைக்கிறது (Sakthi, 2010).

"கற்பகத் தருவைச் சார்ந்த

காகமும் அமுதம் உண்ணும்

விற்பன விவேகம் உள்ள

வேந்தரைச் சேர்ந்தோர் வாழ்வார்

இப்புவித் தன்னில் என்றும்

இலவு காத்திடும் கிளிபோல்

அற்பரைச் சேர்ந்தோர் வாழ்வது

அரிதரி தாகும் அம்மா"

இன்பந்தரும் கற்பக மரத்தில் வாழும் காகமும் அமுதம் உண்ணும். அதுபோல் சமயோசித அறிவுள்ள அரசனை அண்டியுள்ளோர் நலமுடன் வாழ்வார்கள். அற்பரை அண்டி இருப்போர் வாழ்வது இலவங்காய் பழுக்கும் என்று காத்திருக்கும் கிளி போல அரிதிலும் அரிதாகும் என்று அறத்தைப் போதிக்கிறது (Sakthi, 2010).

"அரிசி விற்றிடும் அந்தணர்க்(கு) ஓர்மழை

வரிசை தப்பிய மன்னருக்(கு) ஓர் மழை

புருஷனைக் கொன்ற பூவையர்க்(கு) ஓர் மழை

வருடம் மூன்று மழையெனப் பெய்யுமே"

தம் குலதர்மத்தை விட்டு அரிசி வணிகம் செய்யும் அந்தணர்க்கு ஒரு மழை அரச தர்மத்தைத் தவறிய மன்னருக்கு ஒரு மழை கணவனைக் கொன்ற பெண்ணுக்கு ஒரு மழை என ஆண்டுக்கு மூன்று மழை பெய்யும் முன் பாட்டில் மாதம் மூன்று மழை என்றவர். இப்பாட்டில் ஆண்டுக்கு மூன்று மழை என்றும் கூறுகிறார். நீதிநெறியான வாழ்க்கை முறையின்மையை கூறியுள்ளது(Sakthi, 2010).

"தும்பினில் புதைத்த கல்லும்

துகள் இன்றிச் சுடர் கொடாது

பாம்புக்குப் பால்வார்த் தென்றும்

பழகினும் நன்மை தாரா

வேம்புக்குத் தேன்வார்த் தாலும்

வேப்பிலை கசப்பு மாறா

தாம் பல நூல் கற்றாலும்

துர்ச்சனர் தக்கோர் ஆகார்"

பாதையில் புதைத்த ரத்தினங்கல் புழுதி படிந்து இருக்குமே அவ்வாறு ஒளி வீசாது, பாம்புக்கு பால் கொடுத்தாலும் அது நமக்கு நன்மை செய்யாது. வேப்ப மரத்துக்குத் தண்ணீருக்கு பதில் தேன் ஊற்றினாலும் இலையின் கசப்பு மாறாது. அது போல் கெட்ட குணம் உள்ளவர்கள் பல நூல்களைக் கற்றாலும் நல்லவர்கள் ஆகமாட்டர்கள் என்று சிறந்த அறக்கருத்துக்களை இப்பாடல் வழி அனைத்து மக்களும் அறியும்படி பாடலில் சிறந்த பொருள் நயத்துடன் அமைந்துள்ளது (Sakthi, 2010).

"அற்ற குளத்தின் அறுநீர்ப் பறவைபோல்

உற்றுழித் தீர்வார் உறவல்லர் - அக்குளத்திற்

கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே

ஒட்டி கூறுவார் உறவு"

ஔவையார் இயற்றிய மூதுரை நான்கு வரிகளைக் கொண்ட 30 பாடல்களைக் கொண்டது. ஒவ்வொரு பாடலும் வாழ்விற்குத் தேவையான அறக்கருத்துக்களை நவில்கின்றன (Ganasen, 2018). பயன் கருதாமல் உதவி செய்பவர்களுக்குத் தென்னையையும், நல்லவர்களுக்குச் செய்யும் உபகாரம் கல்மேல் எழுதிய எழுத்தையும் மானமுடைய சான்றோர்க்குக் கற்றுணையும் சான்று காட்டியிருப்பது இவரின் கற்பனைத் திறனையும் உண்மைகளைக் கூறியுள்ளது. நமக்கு துன்பம், வறுமை, வந்தபொழுது நீங்கிச் செல்பவர்கள் உற்றார் உறவினர்கள் ஆகார். துன்பம் வந்தபோதும் வறுமைக் காலத்தும் நம்மை நீங்காது இருப்போரே உண்மையான சுற்றத்தாராவார் என்று கூறியுள்ளார்.

"கல்லானே யானாலுங் கைப்பொருள் ஒன்றுண்டாயின்

எல்லாருஞ் சென்றங்கு எதிர்கொள்வர் - இல்லானை

இல்லாளும் வேண்டார் மற்று ஈன்றெடுத்த தாய்வேண்டாள்

செல்லாது அவன் வாயிற் சொல்"

கல்லாதவனாயினும் பொருள் உள்ளவரை எதிர்கொண்டு உபசரிப்பர். ஆனால் பொருளில்லாதவனை மக்களும், மனைவியும் விரும்பமாட்டாள். உற்ற உறவுகள், பெற்ற தாயும். உடன்பிறப்புகள் யாருமே விரும்பமாட்டார்கள் என்று கூறுகிறார் (Ganasen, 2018).

## தமிழ் இலக்கியங்களில் அறநெறி

“அறவோர்க் களித்தலும், அந்தணரோம்பலும்

துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்

விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை

என்று விருந்தோம்பும் இல்லறக் கடமையை ஆற்ற

இயலாமையை வெளிப்படுத்துகிறாள்”

மனைவியோடு சேர்ந்து இல்லற வாழ்க்கை வாழ்வது விருந்தினரை உபசரிப்பதேயாம் என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார் (Velmurugan, 2018).

“நெல்லும் உயிர் அன்றே நீரும் உயிர் அன்றே

மன்னன் உயிர்த் தேமலர்தலை உலகம்

அதனால் யான் உயிர் என்பது அறிகை

வேல்மிகு தானை வேந்தர்க்குக் கடனே”

மக்களுக்கு உணவும் அவ்வுணவு விளைவதற்கு ஆதாரமாகிய நீரும் உயிர் தருவன அல்ல. மன்னனையே உயிராகக் கொண்டு வாழ்கின்றனர் (Velmurugan, 2018). எனவே மக்களது உயிர் தான் என உணர்ந்து உடலன்றி உயிர் வாழா என்னும் உண்மையறிந்து உடலைப் பேணுவது போல மக்களை பாதுகாத்து பராமரித்து வாழ்வது மன்னனது கடமையாகும். மன்னனாக இருந்தாலும் ஏழையாக இருந்தாலும் உண்பது நாழி உடுப்பது இரண்டே தேவைக்கு அதிகமாக சேர்த்து வைப்பதில் எவர்க்கும் பயனில்லை என்ற அறக்கருத்தே கூறப்படுகிறது.

## தொல்காப்பியத்தில் அறம்

“இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு

அன்பொ புணர்ந்த ஐந்திணை மருங்கின்

காமக் கூட்டம் காணுங் காலை

மறையோர் தோத்து மன்றல் எட்டனுள்

துறைமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே”

உலகத்தில் எத்தனையோ உயிரினங்கள் இருந்தாலும் மனிதனுக்கு மட்டுமே தான் வாழும் நெறிமுறை உண்டு. சங்கத் தமிழர்கள் தங்களது வாழ்க்கையை அகம், புறம், என இரண்டாகப் பகுத்துக் கொண்டனர். கூடிவாழ்ந்த தமிழர்கள் சமூகத்தில் தனித்தனி கடமைகளை உருவாக்கினர். அதன்படி தங்களது வாழ்க்கை முறைகளை கொண்டு வாழ்ந்தனர் (Velmurugan, 2018).

“ஆர்கழி யுலகத்து மக்கட்கெல்லாம்

பேரிற் பிறந்தமை ஈரத்தின் அறிய

ஈரம் உடைமை ஈகையின் அறிப”

அறத்தை இளமையிலேயே செய்ய வேண்டும் (Velmurugan, 2018). கடல் சூழ்ந்த உலகத்தில் வாழும் மக்கள் எல்லோருக்கும் ஒருவன் பெருங்குடியில் பிறந்தமையை அவன் ஈகையினாலே அறிவர் என்பது கூடலூர்கிழார் கூற்றாகும்.

“வைகறை யாமம் துயில் எழுந்து தான் செய்யும்
நல்லறமும் எண்பொருளும் சிந்தித்து வாய்வதில்
தந்தையும் தாயும் தொழுதெழுக வென்பதே
முந்தையோர் கண்டமுறை”

வைகறையில் துயில் எழுந்து மறுநாள் செய்ய வேண்டிய நல்ல செயலை அறத்தோடு தொடங்கி தந்தையையும், தாயையும் தொழுது எழுந்து ஒரு செயலைச் செய்ய வேண்டும். நற்செயல்களைச் சிந்தித்தல், பெற்றோரைத் தொழுதல் என்பன போன்ற நன்னெறிகளை இந்நூல் வழி உணரமுடிகிறது (Velmurugan, 2018).

## முடிவுரை

அன்பையும், பக்தியையும், தருமத்தையும், மனித பண்பையும், ஒழுக்கத்தையும் பேணிகாக்க வேண்டிய சீலங்கள் எனப் போதிப்பது நமது இலக்கியங்களே, தன்னை அறிதலை தலையாய கடமைகளாக அறநூல்கள் கூறியுள்ளது. அறநூல்கள் கற்றறிந்தார் பூண்ட கடன் என்ன என்பதை நற்றமிழால் நாளும் நவிழ வேண்டும். மனிதனுக்கும் மனித மனத்திற்கும் பாலமாக இருப்பது நீதி நூல்கள் மட்டுமே. அனைத்து உயிர்களிடம் அன்பு கொண்டு உறவாடி, மனித உணர்வுகளை மதித்து நடக்க நமக்குக் கற்பிக்கப்பட்ட பண்புகளின் பிறப்பிடம் அறநூல்கள் ஆகும். சமயக் குரவர்கள் வளர்த்த அறம், திருக்குறள், சங்கப் பாடல்கள், வழி காண நாம் முன்வர வேண்டும். திருமந்திரம் ஒவ்வொன்றும் தீமைகள் செய்திட நாணிட, அறத்திற்கு வழிகாட்டி ஒழுக்கச் சீலராய் மனிதர் வாழ்ந்திட நன்மைகள் செய்து குறுக்கிடும் தடைகள் ஏற்பட்டால் அதனை உதிர்த்தும், அறவழி வாழ்பவர் நரகம் செல்லாமல் சொர்க்கமே கிடைத்திடும். மனிதன் மனிதனாக வாழ்ந்திட வடித்திட்ட நூல்கள் அறம், அன்பு, இரண்டும் கண்களாக பாதுகாக்க வேண்டும். உலகத்தின் நன்மையையும், நம்முடைய வருங்காலத்து சுகத்தையும் உத்தேசித்து வேத வாழ்க்கையை அனைவரும் பின்பற்ற வேண்டும். வேத வாழ்க்கை என்பது அறநெறிப்படி பற்றற்ற முறையில் சமூகக் கடமைகளைச் செய்து எந்த உயிர்களுக்கும் இடையூறு இன்றி தெய்வ பக்தி கொண்டு வாழ்நாளைக் கழித்தல் வேண்டும். எவரையும் தீமை ஏற்படும் வகையில் பொல்லாங்கு உரையாமை சாலச்சிறந்தது. அடிப்படையில் பொய் பேசுவது, பொருள் மீதான ஆசை மறந்தும் கூட பிற பொருளையோ நாடக்கூடாது என்றும் சிறந்த கருத்துக்களை ஆய்ந்ததே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## References

Ganasen, C. (2018) Aranoolkal Unarththum Valviyal, Shanlax International Journal of Tamil Research, Madurai, India.

Julius, Tha.Joe. (2010) Aarivai Virivakum, Aranoolkal, International Insitute of Tamil Studies, Chennai, India.

Sakthi, (2010) Vivekasindhamani, Saradha Pathippagam, Chennai, India.

Usha, S. (2010) Ulaga Needhi Molintha Vendatha Pechsukalum Ulaga nathar Payanpaduthiya sorkalum, Shanlax International Journal of Tamil Research, Madurai, India.

Velmurugan, V. (2018) Tamil Ilakkingalil Aranerik kurikal, Shanlax International Journal of Tamil Research, Madurai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License